மலர் - 9 ஜூன் - 1996 இதழ் - 6




புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

வெளியிடுவோர்
காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்

இடம் :- மணல் மேடு வீதி, ஈரோடு 638002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வு வகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே


பக்கம்

1. "சீஷத்துவம்" 1
2.. தெய்வீக சுகமளித்தல் ဂ
3. பெண்கள் பகுதி 14
4. கொடுத்தல் 17
6. சபைக்கு வராதவர்களுக்கு ஒரு திறந்த கடிதம் 22
5, வழி, சத்தியம், ஜீவன் 24
7. மாணவர் விளக்க உரை - பாடம் - 2 29

THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 9 JUNE - 1996 ISSUE -6

## ஆசிரியவுரை

# "சீஷத்துவம்"

"சீஷத்துவம்" என்னும் இவ்வழகிய வார்த்தையைப் பற்றி நம்மில் அநேகருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. நம்முடைய அன்றாட வழக்கில் இவ்வார்த்தையை நாம் அதிகம் பயன்படுத்தாததே அதற்குக் காரணம். ஆனால், உலக மீட்பராகிய இயேசுக்கிறிஸ்துவின் உண்மைப் பிள்ளைகளாய் வாழ விரும்பும் ஒவ்வொருவரும் இவ்வரிய வார்த்தையின் மெய்ப்பொருளை அறிந்து உணர்ந்திருக்க வேண்டியது மிகமிக அவசியம்.

சீஷத்துவம் என்னும் இவ்வார்த்தை, "சீஷன்" என்னும் மூல வார்த்தையிலிருந்து வருவதாகும். எப்படி "தலைமை" என்ற வார்த்தையிலிருந்து "தலைமைத்துவம்" வருகிறதோ, அதைப்போன்றே இதுவும். தலைமைத்துவம் என்றால், "தலைமையேற்று நடத்தும் திறமை மற்றும் தகுதிகளைக்" குறிப்பது. அது போலவே சீஷத்துவம் எனில், அவரைப் பின்பற்ற விரும்பும் சீஷனுக்கு இருக்க வேண்டிய பண்புகள் மற்றும் குணங்களை வலியுறுத்துவது.

முதலாவது, சீஷன் என்றால் யார் என்பதை நாம் கவனிப்பது அவசியம். இவ்வார்த்தைக்குப் பல பொருள்கள் உண்டு. மாணவன், கற்றுக்கொள்கிறவன், பின்பற்றுகிறவன் என்பவை அவைகளில் சில. ஆனால், முதல் நூற்றாண்டுக் காலத்தில், இன்னும் ஆழமான பொருள் இருந்தது. "தன்னுடைய ஆசானை அப்படியே காப்பி அடிப்பவன்" என்பதே அது. இப்பொருள் தான் மிகவும் ஏற்புடையதாகத் தெரிகிறது.

சரி, புதிய ஏற்பாட்டுக்குள் சென்று பார்க்கும்போது, சீஷர்கள் இயேசுவுக்கு மாத்திரம் இருக்கவில்லை. மோசேக்கும் (யோவா 9:28) யோவானுக்கும் கூட (யோவா 1:35) சீஷர்கள் இருந்துள்ளார்கள். இந்த சீஷர்களெல்லாம் முதல் நூற்றாண்டோடு முடிந்து விட்டனர் என்று நினைக்கத் தேவையில்லை. இன்றைக்கும் இயேசுக்கிறிஸ்துவின் பிள்ளைகளாய் வாழும் ஒவ்வொருவரும் சீடர்களே. ஆம், கிறிஸ்தவர்களுக்கு வேதாகமத்தில் பல பெயர்கள் உண்டு. அவைகளில் ஒன்று தான்"சீஷர்கள்" என்பது. "அந்நாட்களில் சீஷர்கள் பெருகின போது. . . ." (அப். 6:1) என, மனந்திரும்பி குணப்பட்டவர்களைக் குறித்து லூர்க்கா எழுதியுள்ளார்.

இப்பொருளினடிப்படையில் பார்க்கும்போது, வேத வசனங்களின்படி தங்களை சுத்திகரித்து, மெய்க்கிறிஸ்தவ வாழ்க்கை வாழும் ஒவ்வொருவரும் சீஷரே. சீஷராக வாழும் ஒவ்வொருவரும், வாழ விரும்பும் யாவரும், சீஷனாக இருப்பதற்குக் கொடுக்க வேண்டிய விலையாகிய "சீஷத்துவத்தைக்" குறித்து அறிந்து கொள்வது அவசியம். முதலாவது, 'சீஷத்துவம்' என்பது சுத்தமாக முடியாதது அல்ல என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அன்பும், இரக்கமும், மனதுருக்கமும் நிறைந்த நமதுதேவன், முடியாத ஒன்றை மனிதர்களாகிய நம்மிடமிருந்து ஒருபோதும் எதிர் பார்ப்பதில்லை. ஏனெனில் நம்முடைய எல்லைகளுக்கு நூல் பிடித்தவர் அவரே.

தேவனாலே, கொடுக்கப்பட்டுள்ள அநேக வசனங்கள் இதை உறுதிப்படுத்துவதாகவே உள்ளது. "வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும், மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார். (மத். 11:28-30)

"...அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல" (யோவா.5:3)

"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலநுண்டு" (பிலிப் 4:13)

"சீஷத்துவம்" முடிகின்ற ஒன்றே என்று எப்படி அநேக வசனங்கள் சொல்கிறதோ, அதைப்போலவே சீஷத்துவத்தை வலியுறுத்தும் வசனங்களும் நிறைய உண்டு. அவைகளில் ஒரே ஒரு வசனத்தை மாத்திரம் எடுத்து உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

"ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக் கடவன்" (லூக். 9:23). இவ் வசனத்தைக் கொஞ்சம் பிரித்துப் பார்த்து பொருள் காண்போம்.

## I. ஒருவன் :

இவ்வார்த்தை கிறிஸ்தவத்திற்கு மிக முக்கியமானது. உண்மை மார்க்கமாகிய கிறிஸ்தவத்தை சிறையில் அடைக்காமல் சுதந்திரமாகச் சுற்றிவர அனுமதிக்கும் வார்த்தை. உலகில் நாம் காணும் ஏனைய மதங்களெல்லாம் தங்களுக்கென ஒரு குறுகிய வட்டத்தை ஏற்படுத்திக் கொண்டு, காலம் காலமாக அதற்குள் வலம் வந்து கொண்டிருக்கிறது.

ஆனால், கிறிஸ்தவத்தின் நடு நாயகமாக விளங்கும் கிறிஸ்து பெருமான், இந்த உலகமானது ஏற்படுத்தி வைத்திருக்கும் அனைத்துத் தடைகளையும் தனது மார்க்கம் தகர்த்தெறிய வேண்டுமென விரும்பினார். ஆகவே தான், உலகெங்கிலுமுள்ள "எவரை வேண்டுமானாலும் குறிக்கும்" "ஒருவன்" என்ற வார்த்தையை ஆழமான அர்த்தத்தோடு பயன்படுத்தினார். இயேசுக்கிறிஸ்துவின் இந்த வார்த்தை உலகமானது ஏற்படுத்தி வைத்திருக்கும் ஜாதி பேதம், நிறபேதம், மொழி பேதம், சமுதாய பேதம் போன்ற அனைத்துத் தடைகளையும் சுக்கு நூறாக்குகிறது. உலகத்தின் எல்லா எல்லைகளையும் தாண்டிச் செல்கிறது.

யோவான் 3:16ல் பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்தும் "எவனோ" என்ற வார்த்தையும் இதே பொருள் உடையது தான். ஆக இயேசுவின் சீஷராக மாறவும், வாழவும் யாருக்கும் தடையில்லை. சீஷத்துவத்தின் விலையைக் கொடுக்கவும், சீஷனாக வாழவும் நான் தயார். ஆனால் எனக்கு தான் அந்த பாக்கியம் கிட்டாமல் போய்விட்டதே என யாரும் குறைப்படவோ, அங்கலாய்க்கவோ முடியாது.

## II விரும்பினால் :

எவர் வேண்டுமானாலும் கிறிஸ்துவின் சீடராக வாழ முடியும் என்ற ஒரு நிலை இருந்தாலும், சீஷத்துவம் யாருக்கும் கட்டாயம் அல்ல. அன்பாகவே இருக்கிற நமது தேவன் (I யோவா 4:8) மனிதர்களாகிய நம்மை அதைச் செய், இதைச் செய் என்று கட்டாயப்படுத்தினால் அல்லது அப்படிச் செய், இப்படிச் செய் என்று நிர்ப்பந்தப்படுத்தினால் அவர் அன்புள்ளவர் என்பதில் அர்த்தமில்லாமல் போய்விடும். ஒருவனுடைய விருப்பத்திற்கு செயல்பட அனுமதிக்காத ஒருவன், அவனை

நான் நேசிக்கிறேன் என்பது சரியாக இருக்குமா? இருக்காது தானே. அன்பு செலுத்துகிறேன் என்று சொல்லிவிட்டு, கட்டாயப்படுத்தும் ஒருவனை, நாம் ஏமாற்றுக்காரன் என்று தானே சொல்லுவோம்?

ஆனால், நம்முடைய தேவன் ஏமாற்றுக்காரர் அல்ல. அவர் உண்மையுள்ளவர். வாக்குமாறாதவர் (எபி. 10:23) மனிதர்களாகிய நம்மைப் படைக்கும் பொழுதே சுய சித்தத்தோடுதான் படைத்தார். நன்மை, தீமை அறியும் அறிவையும், எதை வேண்டுமானாலும் தெரிந்தெடுக்கும் உரிமையையும் கொடுத்தார். நம்முடைய செயல்பாடு அதனடிப்படையில் இருக்க வேண்டுமென்றே விரும்புகிறார்.

தன்னைப் பின்பற்றும்படி கிறிஸ்து யாரையும் கட்டாயப்படுத்துவதில்லை என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டைக் காண்போம், மாற்கு எழுதின சுவிசேஷம் 10-ம் அதிகாரம் 17-22 வசனப்பகுதியை வாசித்துப் பாருங்கள். அங்கே ஒரு இளைஞனைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள அந்த இளைஞன் இயேசுவண்டை ஓடி வந்து, முழங்கால் படியிட்டு, நல்ல போதகரே நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டுமென்ற வினாவோடு சம்பாஷணையை ஆரம்பித்தான். சரியான திசையில் தொடங்கின. உரையாடல் இறுதியில் சோகத்தில் முடிவடைகிறது. ". . . . இந்த வார்த்தையைக் கேட்டு, மனமடிந்து துக்கத்தோடே போய்விட்டான்." (வ. 22) என்று அவனைப் பற்றி வசனம் கூறுகிறது.

தன்னை நாடி, ஓடி வந்தவன், துக்கத்தோடே திரும்பிப் போவதைக் கண்ட இயேசுக் கிறிஸ்து, அவனை எப்படியாவது தன்னுடைய சீஷனாக மாற்ற ஏதாவது செய்தார் என்றோ, அவனைக் கட்டாயப்படுத்தினாரென்றோ வேதாகத்தில் இல்லை. சொல்ல வேண்டியதைச் சொன்னார். ஆனால் தீர்மானிக்கும் உரிமையை அவனிடத்திலிருந்து இவர் பிடுங்கிக் கொள்ளாமல் அவனுடைய விருப்பத்திற்கே விட்டு விட்டார், என்பதைக் கவனியுங்கள்.

## III தன்னைத் தானே வெறுத்து :

சீஷத்துவத்துக்குண்டான விலையைக் கொடுப்பதில் இது ஒரு முக்கியமான கட்டம். தன்னைத்தான் வெறுத்து என்பதை பெரும்பாலான கிறிஸ்தவர்கள் தவறாகப் புரிந்து வைத்துள்ளனர். நாம் விரும்புவதை விலக்குவதும், நமக்குத் தேவையானதை வேண்டாமென்று சொல்வதும் தன்னைத்தான் வெறுப்பதல்ல. மாறாக, "தன்னையே வெறுத்துவிடுவது" - என்பது தான் உண்மைப் பொருள்.

தனக்கு எது லாபம், தனக்கு எது அனுகூலம், தனக்கு எது மகிழ்ச்சி, தனக்கு எது ஆதாயம் என்று தன்னை மையமாக வைத்துக் காரியம் செய்யாமல், எந்தவொரு செயலுக்கும் கிறிஸ்துவை மையாக வைத்து சிந்திக்க வேண்டும். கிறிஸ்து இந்த இடத்தில் இருந்திருந்தால் என்ன செய்திருப்பார், என்ன பேசியிருப்பார், எப்படி நடந்திருப்பார், எப்படிச் சிந்தித்திருப்பார் என நிதானித்துப் பார்க்க வேண்டும். பவுலடியார் பிலிப்பியருக்கு எழுதும் போது அதைத்தான் குறிப்பிடுகிறார். "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலுமிருக்கக் கடவது" (பிலி. 2:5)

நாம் நம்முடைய சுயத்தை வெறுக்காமல் தேவனுக்கு உகந்த பிள்ளையாக மாற முடியாது. சீஷத்துவத்திற்குண்டான விலையைக் கொடுக்கவும் முடியாது. அப்போஸ்தன் பவுல், வேறெந்த அப்போஸ்த லனும் சொல்லாத அளவுக்கு, "**நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்**" என்று (I கொரி. 11:1) துணிந்து சொன்னதின் இரகசியம் தெரியுமா? கீழ்க் காணும் வசனங்கள் விடை சொல்கிறது பாருங்கள் "ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்." (பிலிப். 3:7) "கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்" (1:21) என்று கிறிஸ்துவுக்காக ஜீவனை விடவும் தயாராய் இருந்தது தான். அன்பரே! அதே கிறிஸ்துவுக்காக நாம் ஒவ்வொருவரும் நம்மை வெறுக்கத் தயாரா?

## IV. சிலுவையை எடுத்துக் கொண்டு

தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட வசனப்பகுதியில் இது தலையாயது என நான் நம்புகிறேன். சாதாரண கிறிஸ்தவனிலிருந்து தங்களைத் தாங்களே ஆன்மீகத் தலைவர்கள் என்று அழைத்துக் கொள்கிற பிஷப் புகள் வரை இதற்குச் சரியான அர்த்தம் தெரிந்ததா என்று விளங்க வில்லை. தங்களுடைய பொருளாதார வசதிற்கேற்ப, தங்களுடைய சமுதாய அந்தஸ்திற்கேற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய சிலுவையை மரத்தாலோ, விலையுயர்ந்த ஆபரணங்களாகிய தங்கத்தாலோ, வெள்ளி யினாலோ செய்து, கையிலோ, கழுத்திலோ, அணிந்து கொள்ளுகின் றனர். அல்லது வீடுகளில் உள்ள சுவர்களை அலங்கரிக்கின்றனர். நண்பரே, சிலுவையை எடுத்துக் கொண்டு என்பதன் பொருள் இதுவல்ல.

இன்றைக்கு பல பிஷப்புகள், பெரிய சிலுவைகளைத் தங்கள் கழுத்தில் தொங்கவிட்டுக் கொண்டு, ஆன்மீகவாதிகள் என்ற பெயரில் அரசியல் நடத்திக் கொண்டும், அரசியல் வாதிகளைக் காட்டிலும் தாழ்ந்த நடக்கையுள்ளவர்களாகவும் இருக்கின்றனர். இவர்களின் சமீப

காவு கண்டுபிடிப்பு, படுபயங்கரமானது. ஆம், எம்மதமும் சம்மதம் என்று எண்ணவும், போதிக்கவும் செய்கின்றனர். அதைவிடக் கொடுமை என்னவெனில் "விக்கிரகங்களுக்கு" முன்னால் போய் கைகூப்பி நிற்கின்றனர். இவ்வகையாய் சிலுவையைச் சுமந்து கொண்டு வேஷம் போடுகிற இவர்கள் ஆன்மீக வாதிகள் அல்ல. ஆன்மீகத்தை மூலதனமாக வைத்து தொழில் நடத்தும் வியாபாரிகள். பக்தியின் பெயரால் பணம் பண்ணும் வஞ்சகர்கள். மத மோசடிக் காரர்கள் இப்படிப்பட்டவர்களைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் சொல்வதைப் பாருங்கள். "ஏனெனில், அநேகர் வேறுவிதமாய் நடக் கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன். இப்பொழுது கண்ணீ ரோடும் சொல்கிறேன். அவர்களுடைய முடிவு அழிவு அவர்க ளுடைய தேவன் வயிறு. அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே. அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்" (பிலி3:18,19)

மாறாக, சிலுவை என்பது பாடுகளுக்கும், அவமானங்களுக்கும் அடையாளமாக விளங்குகிறது. ஏனெனில் நமதாண்டவர் சிலுவையில் அவ்வளவு பாடுகளையும், அவமானங்களையும் அடைந்தார். அவைகளை வர்ணிக்கப் போதுமான வார்த்தைகள் இல்லையென்று கூடச் சொல்லமுடியும். அந்தப் பாடுகளுக்கும், நிந்தைகளுக்கும் பங்காளிகளாக அவருடைய ஒவ்வொரு சீஷனும் இருக்க வேண்டு மென்பதே சிலுவையை எடுத்துக்கொண்டு என்பதின் பொருள்.

அநேகர் நினைப்பதைப் போல கிறிஸ்தவம் ஒரு சொகுசான மார்க் கமல்ல. அது பள்ளங்களும், மேடுகளும் நிறைந்த சாலை. அது பாடுகள் நிறைந்த பயணம். ஆனால், இந்தக் கடும் பயணம் நம்மால் முடியுமா என்று கலங்கத் தேவையில்லை. ஏன் தெரியுமா? "ஏனெனில், கிறிஸ் துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி மாதிரியைப் பின் வைத்துப் போனார்" (1 பேது. 2:21)

இப்பொழுது புரிகிறதா? "சிலுவையை எடுத்துக்கொண்டு" என்பதின் பொருள். சிலுவையை எடுத்துக் கொள்ளத் தயாரா?

## IV. அனுதினமும் :

கிறிஸ்தவத்தைப் பற்றிய ஒரு துக்ககரமான செய்தியென்னவெனில், இன்றை கிறிஸ்தவ உலகம், அதை ஒரு ஞாயிற்றுக்கிழமை மார்க்கமா கவும், மாதாந்திர மார்க்கமாகவும், இராப்போஜன மார்க்கமாகவும், பண்டிகை மார்க்கமாகவும் மாற்றிவிட்டது. தேவனுடைய, அநேகத்

திட்டங்களை மனிதன் பாழ்படுத்தியது போல் இதையும் பாழடித்து விட்டான். "அனுதினமும்" என்னைப் பின்பற்றி வா என்ற கிறிஸ்துவின் உபதேசம் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்களால் செல்லாக்காசாக்கப்பட்டுள்ளது.

அன்றைக்கு, ஒரு இந்து நண்பரிடம் பேசிக் கொண்டிருந்த பொழுது, இப்படியாக ஒரு போடு போட்டார். "உங்கள் மதம் பரவாயில்லை. வாரமெல்லாம் பாவம் செய்து விட்டு, ஞாயிற்றுக்கிழமை மன்னிப்புக் கேட்டுக்கொள்ளலாம்" என்று. அவரை நான் குறை சொல்லவில்லை. சமுதாயத்தில் நாம் கிறிஸ்தவத்திற்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் மரியாதை இவ்வளவு தான்.

இயேசுக் கிறிஸ்து அர்த்தம் தெரியாமலா என்னை "அனுதினமும் பின்பற்றுக்கடவன்" என்று சொல்லியிருப்பார். இடைவெளி ஏற்படும் பொழுது கிறிஸ்தவ வாழ்க்கைக்கு நேரும் ஆபத்தை அவர் அறிந்திருந்தார். அந்த ஆபத்தைப் பற்றி பேதுரு எவ்வளவு அழகாகக் குறிப்பிடுகிறார் பாருங்கள். "**தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன்** கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித்திரிகிறான்" I பேதுரு 5: 8 இந்தக் கெர்ச்சிக்கிற சிங்கத்திடமிருந்து தப்பிக்க வேண்டுமானால், நாம் **அனுதினமும்** அவரைப் பின்பற்றியாக வேண்டும்.

அதுமாத்திரமல்ல, "இதோ சீக்கிரமாய் வருகிறேனென்று" (வெளி.22:7 சொல்லிச் சென்றுள்ள வாக்கு மாறாத நமதாண்டவரின் வார்த்தைகள் நிறைவேற நாம் காத்திருக்கிறோம். ஆனால் அவருடைய வருகையோ "**நினையாத நாழிகையில்**" இருக்கும் என்று வேதாகமம் திட்டமும் தெளிவுமாகக் கூறுகிறது.

அப்படியானால் அவருடைய வருகைக்கு நாம் எப்படிக் காத்திருக்க வேண்டும்? அநுதினமும் காத்திருக்க வேண்டும். ஒவ்வொரு மணி வேளையிலும் நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும். ஒரு வேளை, நாம் விசுவாசத்தை விட்டு விலகி நிற்கும் அந்த ஒரு நாள், அந்த ஒரு மணி வேளை, அவருடைய வருகையின் நேரமாக அமைந்துவிட்டால் நம்முடைய நிலை என்னவாகும்? ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். நரகத்தின் வேதனையை, அதன் கொடுமையை விவரிக்கும் வசனங்களைப் கொஞ்சம் புரட்டிப் பாருங்கள். அப்படியே பரலோகத்தின் நாம் ஏன் அனுதினமும் கிறிஸ்தவனாக வாழ வேண்டுமென்பதின் பொருள் விளங்கும்.

எனக்கு அன்பான தேவப் பிள்ளையே, நான் நேசிக்கும் நண்பரே நீங்கள் எப்படிப்பட்ட சீஷனாக உள்ளீர்? சீஷத்துவத்திற்குண்டான விலையைக் கொடுத்த சீஷனாக உள்ளீரா? அல்லது உலகத்தின் பார்வையில் நானும் இயேசுவின் சீஷன் என்று வேஷம் போட்டுத் திரிகிறீரா? எந்த விலையும் கொடுக்காமல், நாங்கள் மோசேயின் சீஷர்கள் என்று பெருமையோடு சமுதாயத்தில் வலம் வந்த பரிசேயர்களை இயேசுக்கிறிஸ்து எப்படிச் சாடினார் என்பதை நாமறிவோம்.

அன்பரே! நாம் யாரும் அந்த பரிசேயர்களைப் போல் ஊரை ஏமாற்றும் சீஷராக இருக்க வேண்டாம். நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவராய் இருப்பதால், நாமும் நம்முடைய சீஷத்துவத்தில் உண்மையுள்ளவர்களாயிருப்போம்.

## உண்மைச் சீஷராக இருப்பதின் சில பலன்கள்

1. நமதாண்டவராய் அங்கீகரிக்கப்பட்டு மெச்சப்படுகிறோம். மத் 12 : 49, 50
2. கிறிஸ்துவால் ஒளியேற்றப்படுகிறோம் யோவா. 8 : 12
3. பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப்படுகிறோம். யோவா 16 : 13
4. பிதாவானவரால் கனப்படுத்தப்படுகிறோம். யோவா 12 : 26

E.Z.S. ராஜநாயகம்

---

## முதல் முதல்

அவர்கள் ஒரு வருசகாலமாய்ச் சபையோடே கூடியிருந்து அநேக ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினார்கள். முதல் முதல் அந்தியோகியாவிலோ சீஷர்களுக்குக் கிறிஸ்துவர்கள் என்கிற பேர் வழங்கிற்று.

**அப்போஸ்தலர் 11:26**

# தெய்வீக சுகமளித்தல்

அற்புத சுகமளித்தல் என்பது சில மக்களின் மனதை ஆக்கிர மித்துக் கொண்டிருக்கிறது. அற்புத அடையாளங்களைச் செய்யக்கூடிய வாறு. பரிசுத்த ஆவியின் வல்லமையை இன்னும் பெற்றுக் கொள்ள முடியும் எனஅவர்கள் நம்புகின்றனர்.

இவ்வாறான வழியில் தேவன் இன்று செயல்படவில்லை என்று மறுக்கும் போது ஒரு கேள்வி கேட்கப்படுகிறது. "ஆனால், நீங்கள் தெய்வீக சுகமளிப்பதை நம்புகிறீர்கள் அல்லவா?"இந்தக் கேள்விக்கு என்னுடைய பதில் இதுதான்:நான் தெய்வீக சுகமளித்தலை நம்பு கிறேன்; ஆனால் அற்புதசுகத்தைஅல்ல ."ஆனால் அவற்றிற்கு என்ன வித்தியாசம்?என்று நீங்கள் கேட்கக் கூடும். சகல சுகம் பெறுதலும் தெய்வீகமானது தான்; ஆனால் அற்புத சுகம் பெறுதல் இன்று நடைபெ றுவதில்லை.

அற்புதங்களால் மட்டுமே தேவன் செயல்படமுடியும் என நாம் நினைப்போமானால், நாம் தவறு செய்கிறோம். கடந்த காலத்தில், பல வேளைகளில் அற்புதங்கள் வழியாக அவர் செயல்பட்டார் என்பது உண்மையே. உதாரணமாக, பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர் களின் மேல் இந்தக் காரணத்திற்காக அனுப்பப் பட்டார்.

பின்னர் அப்போஸ்தலர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட சிலர் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெறத்தக்கதாக அவர்களின் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெறத்தக்கதாக அவர்களின் மேல் கைகளை வைத்தனர். ஆனால் புதிய ஏற்பாடு எழுதப்பட்டு கொடுக்கப்பட்ட பின் அற்புத யுகம் முடிந்து போயிற்று.

அற்புத யுகத்தின் சமயங்களிலும் கூட, அற்புதங்கள் குறைவாகவும் அதிக இடைவெளிகளிலும் நடை பெற்றன. அப்போஸ்தலர்களும் அவர்கள் கைகளை வைத்தவர்களும் சில இடங்களில் மட்டுமே இருக்க முடிந்தது. எனவே மற்ற எல்லாரும் அற்புத காரியங்களை செய்யக்கூடா தவர்களாக இருந்தனர், ஆகவே, பொதுமக்கள் அனைவரும் தெய்வீக சுகமளித்தலைச் சார்ந்திருக்கவும், இயற்கையின் விதிகளுக்குட்பட்ட காரியங்களை செய்யவும் வேண்டியதாயிற்று.

தேவன் சம்பந்தப்பட்ட சுகமளித்தல், இயற்கை வழியாக நடைபெறும் தெய்வீக சுகமளித்தல்என்பதாகும். தேவன் உலகத்தையும்

அதிலுள்ள சகலவற்றையும் படைத்தார். மூலிகைகள், மருந்துகள் அனைத்தையும் படைத்தவர் அவரே, அவர் நம்மை உண்டாக்கினார், எனவே மருத்துவர்களையும், செவிலியர்களையும் படைத்தார். நோயாளிகளுக்காக மருத்துவமனைகளும் இதர எல்லா வசதிகளும் அவர் மூலமாக உண்டாக்கப்பட்டுள்ளன. மாம்சமான சரீரத்தைப் பற்றியும் அதின் தேவைகளைப் பற்றியும், ஆணும் பெண்ணும் கற்றுத் தெரிந்து கொள்ள அவருடைய ஆசிர்வாதங்கள் மூலமாக அவர் அனும தித்துள்ளார். மருத்துவத்தைக் கற்றுக் கொள்ளவும், நோயாளிகள் சுகம் அடையத் தக்கதான மருந்துகளை அவர்களுக்கு அளிக்கவும், அவர் மேலுமாக அனுமதித்துள்ளார், சரீரத்தின் வித்தியாசப்பட்ட பல பாகங்க ளிலும் மிக துல்லியமாக அறுவை செய்து நோயை அகற்றிடும் திறமையை அவர்களுக்கு கல்வி ,பயிற்சி வழியாக அளித்துள்ளார். அப்படியானால் மனிதனை சுகப்படுத்துவதில் தேவன் ஈடுபட்டுள்ளார் என நாம் கூறலாமா? மிக நிச்சயமாகக் கூறலாம். அதுவே உண்மை.

சுகமுள்ளவர்களுக்கு அல்ல, பிணியாளிகளுக்கே வைத்தியர் தேவை என்று இயேசு கற்பித்தார். (மத்தேயு 9:12), லூக்கா, அப்போஸ்தல ருடைய நடபடிகள் ஆகிய நூல்களின் ஆசிரியரான லூக்கா, 'ஒரு பிரியமான வைத்தியர்' என அழைக்கப்பட்டார். (கொலோ. 4:14)எருச லேமிலிருந்து எரிகோவுக்குச் சென்றபோது வழியிலே கள்ளர் கையில் அகப்பட்டு குற்றுயிராக விடப்பட்ட ஒரு யூதனைப்பற்றி இயேசு சொன்னார். மதவாதிகளாக இருந்த ஒரு ஆசாரியனும், ஒரு லேவியனும் அந்த வழியே வந்து, அவனைக் கண்டும், விலகிப்போனார்கள் பின்னர், யூதர்களின் பாரம்பரிய எதிரியான ஒரு சமாரியன் அவனைக் கண்டு, மனதுருகி, அவனுடைய காயங்களுக்கு எண்ணெயும் திராட்சர சமும் வார்த்து, அவனை ஒரு சத்திரத்திற்குக் கொண்டு போய், சத்திரத்தானிடம் கொஞ்சம் பணம் கொடுத்து அவனைக் கவனித்துக் கொளள்ளும்படி கூறியதோடு, அதிகமாக அவனுக்கு ஏதாவது செலவ ழித்தால், தான் திரும்பி வரும்போது தருவதாகவும் கூறினான்.ஏன் அவனுடைய காயங்களுக்கு சமாரியன் எண்ணெயும் திராட்ச ரசமும் வார்த்தான். ஏனெனில் காயங்களை சுகப்படுத்தும் மருந்துகளாக அவை பயன்பட்டன. அப்படியானால் அவனுடைய காயங்களை சுகப்படுத்து வதில் கர்த்தருக்கு எவ்விதசம்பந்தமும் இல்லைஎன நீ கருதுகிறயா?இறு தியாக, தீமோத்தேயுவிடம்,"நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல், உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக் காகவும் கொஞ்சம் திராட்ச ரசமும் கூட்டிக் கொள்"என பவுல் அறிவுட் டுகிறார். (1தீமோ .5:23) இப்படியான அறிவுரையை பவுல் வழங்குகிற காலத்தில் அற்புதங்கள் நடைபெற்றுக் கொண்டுஇருந்தன என்பது

இங்கு குறிப்பிடத்தக்கது. தீமோத்தேயுவை பவுல் அற்புதமாக ஏன் சுகமளிக்க வில்லை? நமது கர்த்தரும், அப்போஸ்தலர்களும், அவர்கள் யார் பேரில் கைவைத்தார்களோ அவர்களும், சகல நோயாளிகளையும், ஊனமுற்றவர்களையும் சுகப்படுத்தினர். ஆனால் மக்களை சுகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக மட்டுமே அற்புதங்கள் நடைபெற வில்லை. சிலர் சுகமளிக்கப்பட்டனர். சுகம் பெற்றவர்கள் அதனால் பயன்பெற்றார்கள். ஆனால் உண்மையில் அப்போஸ்தலர் நடபடி 8-ம்அதிகாரத்தில் நாம் படித்தபடி, விசுவாசிகளை உண்டாக்குவதற்காகவும், வசனத்தை உறுதிப்படுத்தவும் (மாற்கு 16:20)அற்புதங்கள் நடத்தப்பட்டன. ஆனால், வசனம் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாலும், தேவனுடைய வார்த்தையைக் கேட்கும் போது விசுவாசம் உண்டாகிறது என்பதாலும் ரோமர் 10:17 இனி அற்பதங்கள் தேவையில்லை. இன்று அற்புதங்கள் நடைபெறவேண்டிய அவசியம் என்ன?

அடுத்த கட்டமாக, ஜெபம் இங்கு வகிக்கும் இடம் எது? நாம் ஒரு அற்புதத்தை எதிர்பார்த்து, நோயாளிகளுக்காக அல்லது நமது தேவைகளுக்காக ஜெபிக்கிறோமா? அற்புதங்கள் இன்று நடைபெறாவிடில், ஜெபத்தின் அவசியம் என்ன? நாங்கள் ஜெபத்தில் நம்பிக்கை வைத்துள்ளோம் என்பதில் சந்தேகத்திற்கு எவ்விதக் காரணமும் கிடையாது என்பதை உங்களுக்குத் தெரிவிக்கிறோம். தேவன் ஜெபங்களைக் கேட்கிறார் அவைகளுக்குப் பதிலளிக்கிறார் என்பதை நாங்கள் விசுவாசிக்கிறோம். அவர் அதை எப்படிச் செய்கிறார்? ஒரு அற்புதத்தை செய்வதின் மூலமாகத்தான் நமது ஜெபத்திற்கு அவர் பதிலளிக்கிறார்ரா? நல்லது, ஒரு தகப்பன்-பிள்ளைகள் உறவு பற்றிய நிலை என்ன? பிள்ளைகள் தகப்பனிடம் ஒரு வேண்டுகோளை வைக்கும் போது எப்போதுமே அற்புதங்கள் வழியாகத்தான் அவர் பதிலளிக்கிறாரா? அப்படிச் செய்வதில்லை என நமக்குத் தெரியும். பின்னர், தனது குழந்தைகளின் வேண்டுகோளை தகப்பன் எவ்வாறு நிறைவேற்றுகிறார். அவருக்கு ஏற்ற இயற்கை வழியில் நிறைவேற்றுகிறார். மேலுமாக பிள்ளைகளின் நலத்திற்கு ஏற்ற வேண்டுதலையே நிறைவேற்றுகிறார். அவர்கள் கேட்பதை அவர் கொடுக்கக் கூடாது என்றாலோ, அல்லது அது அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் என்று அறிந்தாலோ அவர்களுடைய வேண்டுகோள்களை நிறைவேற்றுவதில்லை. தேவனுடைய காரியத்திலும் இந்த உண்மை பொருந்தும். அவர் நமது தந்தை, நாம் அவருடைய பிள்ளைகள். நம்மை அவர் நேசிக்கிறார், நாம் கேட்பவற்றைக் கொடுக்க விரும்புகிறார். அதே சமயத்தில், நமக்கு எது தேவையில்லை என்பதும் அவருக்குத் தெரியும். அது நமக்கு

நல்லதல்ல வென்றால், அவர் அதை நமக்குத் தரமாட்டார். ஆனால் நமக்கு அது நல்லதாக இருந்து, அதை அவர் கொடுக்கக் கூடுமானால், நிச்சயமாக நமது ஜெபத்திற்குப் பதிலளித்து நமது வேண்டுகோளை நிறைவேற்றுவார்.

இயேசு சொன்னார்: "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்;தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்;தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களில் எந்த மனிதனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் பாம்பைக் கொடுப்பானா?ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? மத்தேயு 7:7-11 இப்போது, மீண்டுமாக, தமது பிள்ளைக்ளின் ஜெபத்தைக் கேட்க கர்த்தர் ஒரு அற்புதத்தைச் செய்யவேண்டுமா? நிச்சயமாக இல்லை.

நாம் நமது ஆகாரத்திற்காக ஜெபிக்கிறோம். ஆனால் தேவன் நமக்கு நல்ல சுகத்தை தந்து உணவைத் தேடுவதற்கான வழியையும் காட்டு கிறார். உணவை உண்டாக்கி நமது கைகளில் தேவன் அவற்றைப் படைக்கலாம், ஆனால் அப்படிச் செய்வதை அவர் தேர்ந்தெடுக்க வில்லை. அல்லது அவ்வாறு செய்வதாக அவர் வாக்களிக்கவும் இல்லை;அப்படிச் செய்யப் போவதுமில்லை. நாமோ அல்லது நமது நண்பர்களோ நோயுற்றிருந்தால், சுகமடைய தேவனை நோக்கி ஜெபிக் கலாம். அற்புதத்தினால் நமக்கு அவர் சுகமளிக்க இயலும்;என்றாலும் அவர் அப்படிச்செய்வதில்லை, செய்வதாக வாக்களிக்கவும் இல்லை; ஆனால் நாம் ஒரு மருத்துவரைப் பார்க்கவும், மருந்துகளைப் பெற்று அவற்றைச் சரியான முறையில் உட்கொள்ளவோ, போதுமான ஓய்வு எடுத்துக் கொள்ளவோ நமக்கு அவர் அறிவைக் கொடுத்திருக்கிறார். இப்போது, நாம் அவ்விதமாகச் செய்து குணமடையும் போது, நம்மைக் குணப்படுத்தியது யார்? தேவன் நமது ஜெபத்தைக் கேட்டாரா இல்லையா?

நாம் கேட்பதற்கு முன்பாகவே நமது தேவைகளை தேவன் அறிகிறார் என கிறிஸ்து நமக்குச் சொல்லுகிறார்.(மத். 6:8). பின்னர் யோவான் கூறுகிறார். "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப்

பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக்கேட்டாலும், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்," (1யோவான் 5:14.15),

ஆம், தேவன் இன்றும் சுகமளிக்கிறார். ஆனால் அற்புதத்தினால் அல்ல. அவருடைய வல்லமையை நிரூபிக்க எதையும் செய்ய வேண்டிய அவசியம் அவருக்கு இல்லை. ஏற்கனவே, மீண்டும் மீண்டுமாக அவருடைய வல்லமை நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அவர் விரும்புகிறதை இன்னும் அவர் செய்ய இயலும். ஆனாலும் அவருடைய வசனத்தில் அவர் வெளிப்படுத்தியிருப்பதைப் போல, இயற்கைக்குரிய, ஆவிக்குரிய சட்டங்களின் மூலமாக காரியங்களைச் செய்ய அவர் தேர்ந்தெடுத்துள்ளார். இயற்கைச் சட்டம் மனிதனுடைய 'சரீர தேவைகள் சம்பந்தப்பட்டது. ஆவிக்குரிய சட்டம் நற் செய்திக்குக் கீழ்ப்படிவதையும், பாவமன்னிப்பு பெறுவதையும், நித்திய ஜீவனை அடையும் நம்பிக்கையைப் பெறுவதையும் சம்பந்தப்பட்டது.

தேவன் நமது வழியிலே காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற மிகப் பலவீனமான நமது விருப்பத்திற்குப் பதிலாக, அவருடைய வழியிலே காரியத்தை நடத்த கர்த்தரில் நாம் போதுமான விசுவாசம் கொள்ள தேவன் நமக்கு உதவுவாராக\ உண்மையென்னவென்றால், தேவன் பேரில் நமது விருப்பத்தை நாம் திணிக்கக் கூடாது. ஆனால் நமது விருப்பத்தை அவரிடம் ஒப்படைத்து, அவருக்குப் பணிவாக நடக்க முயலுவோம்.

J.C.. சோட்

## நீங்கள் எப்படிப்பட்டவர்

கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்.

## பெண்கள் பகுதி

# கிறிஸ்துவின் சபைக்காக நான் என்ன செய்வேன்?

இன்றைக்கு அநேக கிறிஸ்தவப் பெண்கள் தேவனுடைய சபையில் தங்களுக்கென்று செய்வதற்கு எந்த ஒரு வேலையும் இல்லை என்று கருதிக் கொண்டிருக்கின்றனர். ஏனென்று கேட்டால் அனைத்து தலைமைப்பொறுப்புகளையும் ஆண்களே ஆக்கிரமித்துக் கொள்வதால், பெண்கள் ஆராதனை நேரங்களில் வெறுமனே வந்து அமர்ந்து விட்டு சென்றுவிடுவதாலேயே அவர்கள் பங்கு முடிந்துவிடுகிறது என்று நினைத்துக் கொள்கிறார்கள்.

"ஸ்திரீயானவள், எல்லாவற்றிலும், அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக் கொள்ளக்கடவள். உபதேசம் பண்ணவும், புருஷன் மேல் அதிகாரம் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை: அவள் அமைதலாயிருக்கவேண்டும் I தீமோ 2:11,12 அப்படியானால் நம்முடைய வேலை அத்தோடு முடிந்துவிடுகிறதா?.

இல்லை, உண்மையாகவே, தேவனை ஆராதிப்பது என்பது ஒரு கிறிஸ்தவனுக்கு கிடைக்கக் கூடிய மிகப் பெரிய சிலாக்கியம். இது அவன் செய்கின்ற வேலையோ அல்லது சேவையோ அல்ல. ஆராதனையில் கலந்துகொள்வதின் மூலமாக அவரைத் துதிக்கிறோம். ஆவிக்குரிய பெலனைக் கற்றுக் கொள்கிறோம். சக கிறிஸ்தவர்களோடு ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொள்கிறோம். ஆனால் நாம் தேவனுக்கென்று செய்கின்ற வேலை வாரம் முழுவதும் தொடர்ந்து செய்கின்ற ஒன்றாகும்.

பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் கூறும் போது,"அன்றியும் என் உத்தம கூட்டாளியே, அவர்களுக்கு உதவியாயிருக்கும்படி உன்னையும் வேண்டிக் கொள்கிறேன். அவர்கள் கிலேமெந்தோடும் மற்ற என் உடன்வேலையாட்களோடுங் கூடச் சுவிசேஷ விஷயத்தில் என்னோடே கூட மிகவும் பிரயாசப்பட்டார்கள். அவர்களுடைய நாமங்கள் ஜீவ புஸ்தகத்தில் இருக்கிறது". (பிலிப்பியர் 4 : 3) கெங்கிரேயா ஊர்சபைக்கு ஊழியக்காரியாகிய நம்முடைய சகோதரி பெபேயாளை நீங்கள் கர்த்தருக்குள் பரிசுத்தவான்களுக்கேற்றபடி ஏற்றுக் கொண்டு, எந்தக் காரியத்தில் உங்கள் உதவி அவளுக்குத் தேவையாயிருக்கிறதோ அதிலே நீங்கள் அவளுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று அவளை உங்க

ளிடத்தில் ஒப்புவிக்கிறேன். அவள் அநேகருக்கும், எனக்குங்கூட ஆதரவாயிருந்தவள்.

கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும், ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள். அவர்களைப் பற்றி நான் மாத்திரமல்ல, புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறார்கள். (ரோமர் 16 : 1, 2, 3)

மீண்டும் வசனம் 6-ல் எங்களுக்காக மிகவும் பிரயாசப்பட்ட மரியாளை வாழ்த்துங்கள்", என்று பார்க்கிறோம். அப்போஸ்தலர் நடபடிகள் 16 : 14 - 15 வசனப் பகுதிகளில் லீதியாள் கிறிஸ்தவளாக மாறிய போது பவுலையும் அவனோடிருந்தவர்களையும் தங்கும்படி தன் வீட்டை அவர்களுக்குக் கொடுத்தாள். அப்போஸ்தலர் 18 : 26ல் ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் அப்பொல்லாவை தங்களோடு சேர்த்துக் கொண்டு தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள். அப்போஸ்தலர் 9 : 39ல் தொற்காள் என்ற கிறிஸ்தவப் பெண் தன்னை சுற்றி இருக்கும் விதவைகளுக்கு வஸ்திரங்களையும், அங்கிகளையும் தைத்து கொடுப்பதின் மூலம் அவர்களுக்கு உதவியாயிருந்தாள்.

மேலும் தீத்து 2 : 3 - 4 வசனங்களில் முதிர் வயதுள்ள ஸ்திரீகள், பாலிய ஸ்திரீகளுக்கு போதித்து புத்தி சொன்னார்கள் என்று அறிகிறோம். இளைஞனாகிய திமோத்தேயு விசுவாசத்தில் உத்தம குமாரனாக வளர்வதற்கு அவன் பாட்டியாகிய லோவிசாலும் அவன் தாயாகிய ஐனிக்கேயாளும் காரணமாயிருந்தார்கள் என்று பார்க்கிறோம். மாற்கு 15 : 40, 41 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்து கலிலேயாவிலிருந்த போது அவருக்குப் பின் சென்று ஊழியஞ் செய்து வந்த மகதலேனா மரியாளும், சின்ன யாக்கோபுக்கும் யோசேப்புக்கும் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும், அவருடனே கூட எருசலேமுக்கு வந்திருந்த வேறே அநேக ஸ்திரீகளும் அவர்களோடே இருந்தார்கள் என்று நமக்கு தெரிவிக்கிறது.

மேற்கூறிய பல ஆதாரங்கள் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவ பெண்மணிகள் எவ்வளவு உற்சாகமாக செயல்பட்டார்கள் என்பதை நமக்கு தெளிவாகக் காட்டுகிறது. இதைவாசிக்கும் நாம் கூட தேவனைப் பிரியப்படுத்த விரும்பினால் உற்சாகமாய் செயல்பட ஆரம்பிப்போம்.

கர்த்தருடைய சபைக்கடுத்த காரியங்களில் ஒரு பெண் என்னென்ன செய்ய முடியும்? இதோ சில ஆலோசனைகள்.

1. முதலாவதாக நீங்களும், உங்கள் குடும்பத்தாரும் தவறாமல்

ஆராதனையில் கலந்து கொள்கி றீர்களா? என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2. உங்கள் குழந்தைகளுக்கு வீட்டில் இருக்கும் போது ஆவிக் குரிய காரியங்களில் தக்க பயிற்சியை தவறாமல் அளிக்க வேண்டும்.

3. வாரத்தின் இடைப்பட்ட நாளில் பெண்களுக்கென்றும், குழந்தைகளுக்கென்றும் வகுப் புகள் நடத்த பழகிக் கொள்ள வேண்டும்.

4. கர்த்தருடைய பந்திக்கான பொருள்களை ஆயத்தப்படுத்து வதில் தானாக முன் வர வேண்டும்.

5. ஆராதனை முடிந்து கர்த்த ருடைய பந்திக்கான பாத்தி ரங்களை கழுவி வைக்க வேண்டும்.

6. ஆராதனை முடிந்த சில நிமிடங்கள் பெண்கள் ஒன்றாகச் சேர்ந்து சபை கூடுமிடத்தை சரியாக வைப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

7. பெண்கள் ஒன்றாகச் சேர்ந்து ஆற்ற வேண்டிய சில காரியங்கள் :-

A, வியாதியஸ்தர்களையும், ஆராதனைக்கு வராதவர்களையும் சந்திப்பது.

B, பெண்களுக்கென்று தனி வகுப்புகள் தவறாமல் நடத்துவது.

C, வியாதியாயிருக்கிற அயல கத்தார்க்கும் கூட சில உணவுப் பொருள்கள் அளிப்பது.

D, ஆராதனைக் கூட்டத்தை சுத்தம் செய்ய தனி நாளை ஒதுக் குதல்.

E, சபையின் ஐக்கிய விருந்து களில் உணவு தயாரிப்பதில் உதவி செய்வது.

8. நண்பர்கள், அயலகத்தா ரிடம் அன்பாகப் பேசி. ஏதாவது ஒரு நாள் காலையோ, மாலையோ உங்கள் இல்லத்திற்கு வரவழைத்து தேனீர் கொடுத்து அவர்களுக்கு வேதாகமத்தைப் பற்றி எடுத்துக் கூற வேண்டும்.

9. சபைக்கு அருகாமையில் உள்ள வீடுகள், மற்றும் ஆர்வ முள்ள குடும்பங்களுக்கு உங்கள் கணவன்மார்களுடன் சென்று அங்கு வேதாகமத்தைப் பற்றி விளக்கிக் கூறலாம்.

10. பெண்களாகிய நாம் நம்மைச்சுற்றி இருப்பவர்களுக்கு சரீரப்பிரகாரமாகவோ, ஆவிக் குரிய காரியங்களிலோ, அவர் களின் தேவைகளில் உதவி செய்ய எப்போதும் தயாராக இருக்க வேண்டும்.

இவ்வாறாக, பெண்களாகிய நாம் ஆற்ற வேண்டிய பணி ஏராளமாக உள்ளது. நம்முடைய தாலந்துகளை பயன்படுத்தி வேலை செய்தால் நம்முடைய சபையின் வளர்ச்சி அதிகமாகும். நாமும் விசுவாச வாழ்க்கையில் வளர ஏதுவாகும்.

**B.B. Choate.**

**R.R. Nayagam.**

## புதிய ஏற்பாட்டு ஆராதனை (12)

# கொடுத்தல்

கடைசியாக, புதிய ஏற்பாட்டு ஆராதனை முறையின் இறுதிப் பகுதியான கொடுத்தல் என்பதற்கு நாம் வந்துள்ளோம். வேதாகமம் தெளிவாகச் சொல்லும் காரியங்களில் இதுவும் ஒன்று என்றாலும் மக்கள் பலர் இக்காரியத்தைப் பற்றி மிகவும் அறியாமையில் ஆழ்ந்திருக் கின்றனர். எனவே, சுவிசேஷம் இதைப்பற்றிக் கூறுவது என்ன என்று நாம் பார்க்கலாம். சுவிசேஷத்தின் சில முக்கிய பகுதிகளைச் சுட்டிக் காட்டி நாம் தொடங்குவோம்.

என்னோடு I கொரிந்தியர் *16 : 1, 2* வசனங்களைப் படியுங்கள் : "பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப் பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும் போது பணம் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன்". மேற்கொண்டு செல்லுவதற்கு முன்பு, இந்த வசனங்களை ஆராய்ந்து பார்த்து, அவர் கூறுவதின் முக்கிய கருத் துக்களை எடுத்துக் கொள்வோம்.

*1.* இந்தக் கொடுத்தல், வாரத்தின் முதல் நாள் தோறும் நடைபெற வேண்டியிருந்தது. ஏன்? கிறிஸ்தவர்கள் ஆராதனையில் கூடி வரும் நாளாக அது இருப்பதால், காணிக்கை பெறுவதற்குக் அந்த நாள் தேர்ந் தெடுக்கப்பட்டது. பிற நாட்களைப் பற்றி என்ன? பிற நாட்களைப் பற்றி எதுவும் கூறப்படவில்லை. இந்தக் கட்டளையைப் பொருத்தவ ரையில் வாரத்தின் முதல் நாள் செய்யப்பட வேண்டும் என தெளிவாக் கப்பட்டுள்ளது. தாங்கள் கூடிவரும் நாட்களில் எல்லாம், ஏன், தினமும் கூடினாலும் கூட, காணிக்கை வசூலிப்பதை வழக்கமாக வைத்துக் கொள்ளும் பல மதக் குழுக்களும் உள்ளன. என்றாலும் சுவிசேஷத் தின்படி நாம் நடப்பதாக இருந்தால் அதில் குறிப்பிட்ட நாளில் மட்டுமே ஆராதனையின் இந்தக் குறிப்பிட்ட பகுதி நிறைவேற்றப்பட வேண்டும். எனவே, கிறிஸ்துவின் சபையார் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளும் கூடி வருகின்றனர். அந்த நாளில் தானே அங்கத்தினர்கள் கொடுக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

2. சகல கிறிஸ்தவர்களும் கொடுக்கவேண்டுமென எதிர்பார்க்கப் பட்டனர். கடந்த வாரத்தின் வரவுக்குத் தகுந்தபடி அவர்கள் கொடுத் தனர். தமது மக்களுக்கு எந்த வரவும் இல்லாத நிலையில், கர்த்தர் அவருடைய பிள்ளைகள் கொடுக்க வேண்டுமென எதிர்பார்ப்பதில்லை. என்றாலும், கொடுக்கத் தகுதியுள்ளவர்கள் கண்டிப்பாகக் கொடுக்க வேண்டுமென அவர் எதிர்பார்க்கிறார். அவர்கள் கொடுக்கத் தவறினால், அது பாவம்.

3. அவர்களுடைய வரவுக்குத் தக்கவாறு கொடுத்தலுக்காகச் சேர்த்து வைத்துக் கொள்ளப் பணிக்கப்பட்டனர். அந்நாட்களில் அவர்கள் காய்கனிகளையும், ஆடுமாடுகளையும், அல்லது பிற விளை பொருட்க ளையும் காணிக்கையாக செலுத்தினர். பணமும் கூட கொடுக்கப் பட்டது. இன்றைய நாட்களிலோ வழக்கமாக பணத்தை மட்டுமே காணிக்கையாகக் கொடுத்து வருகிறோம். ஏனெனில், பல மக்கள் தங்க ளிடமுள்ள விலை பொருட்களை விற்று பணமாக்கி வைத்துக் கொள்ளுகின்றனர். அல்லது சம்பளத்திற்கு வேலை செய்து கூலியைப் பணமாகப் பெறுகின்றனர். காணிக்கை பொருளாகவோ அல்லது பணமாகவோ கொடுக்கப்படுவது இடத்தையும், மக்களையும், நிலைமை யையும் பொருத்த காரியம்.

4. அவர்கள் வரவுக்குத் தக்கதாகக் கொடுக்கக் கடமைப்பட்டிருந் தனர். அதாவது, அவர்களுடைய வருமானத்திற்கு ஏற்றவாறு கொடுக்க வேண்டியிருந்தது. ஆனால் வருமானத்திலிருந்து கொடுக்க வேண்டிய பங்கு எவ்வளவு? அது அவரவர் முடிவைப் பொருத்த காரியமாக இருந்தது. இன்றைய நாட்களிலும் அதுவே உண்மை. தசம பாகம் அல்லது பத்தில் ஒரு பங்கு கொடுக்க வேண்டுமென புதிய ஏற்பாடு போதிப்பதில்லை. மாறாக, யூதர்கள் வாழ்ந்து வந்த நியாயப் பிரமா ணத்தை விட மிகவும் சிறப்பான ஒரு சட்டத்தின் கீழ் நாம் இன்று வாழ்வதால், அவர்கள் கொடுத்த பத்தில் ஒரு பங்கை விட, சந்தேக மின்றி, நாம் அதிகமாகக் கொடுக்க வேண்டும். நமக்கு ஒரு சிறப்பான சட்டம், சிறப்பு வாக்குத்தத்தங்கள், மகத்தான நம்பிக்கைகள் யாவும் தரப் பட்டிருப்பதால், நாம் ஏன் அதிகமாகக் கொடுக்கலாகாது? இங்கே இந்தி யாவில் நான் கவனித்த வரை ஒவ்வொருவரும் கொடுக்க விரும்புகின்றனர்; ஆனால் அது ஒரு சில பைசாக்களாகவே இருக் கின்றன. சிலருடைய தகுதியில் கொடுக்கக்கூடிய அதிக அளவு அவ்வள வாகவே இருக்க முடியும். ஆனாலும் பலர் தற்போது கொடுப்பதைவிட மிகவும் அதிகமாக கொடுக்க முடியும். இந்தியாவிலுள்ள மக்கள் பலரிடம் வெற்றிலை, பாக்கு, புகையிலை, சினிமா இன்னும் இது

போன்ற காரியங்களுக்குச் செலவிட பணமிருக்கிறது என்பதையும் நான் கவனித்திருக்கிறேன். இந்த மக்கள் உலகத்திற்கு அடுத்தவர்களாக இருப்பதை நான் உணருகிறேன். இந்தக் காரியங்களுக்கெல்லாம் பணம் இருக்கும் போது, உங்கள் பணத்தை என்ன செய்கிறீர்கள்? நீங்கள் இது போன்ற காரியங்களுக்காக செலவிட்டுக் கொண்டிருப்பீர்கள். இந்த நாட்டிலும் தற்போது நாம் கொடுத்துக் கொண்டிருப்பதை விட அதிக மாகக் கொடுக்க முடியும். நமது வரவுக்குத் தக்கதாக நாம் கொடுக்க வேண்டுமென நமது கர்த்தர் கூறினார். உங்களுடைய வரவு என்ன வென்று நீங்கள் அறிவீர்கள்; எனவே என்ன கொடுக்க வேண்டும் என்பதும் உங்களுக்குத் தெரியும். எப்படியிருந்த போதிலும், நீங்கள் கொடுப்பது அநேகமாக சில்லறைக் காசுகளாக இருக்காமல் காகிதப் பணமாக இருக்க வேண்டும். சில பேர் இன்று கொடுத்து வரும் காகிதப் பணத்தை விட மிக அதிகமாக கொடுக்க இயலும். என்றாலும், நீங்கள் எவ்வளவு கொடுக்க வேண்டும் என நான் உங்களுக்குச் சொல்ல முடியாது. அல்லது நீங்களும் எனக்குச் சொல்ல முடியாது. ஆனால் நாம் கொடுக்க வேண்டும் என்பதைக் கர்த்தர் அறிவார். எனவெ, இனிமேல் நாம் அதிகமாகக் கொடுக்கத் தொடங்க வேண்டும். இதை நீங்கள் ஏற்றுக் கொள்ளுகிறீர்களா?

5. அவர் (பவுல்) வருகிற சமயத்தில் சேர்த்துக் கொண்டிராமல், ஏற்கனவே சேர்த்து வைத்து அவர் வரும்போது கொடுக்க வேண்டிய வர்களாக இருந்தனர். வேறுவிதமாகக் கூறினால், அவருடைய அறிவு ரைப்படி அவர்கள் நடப்பார்களேயானால், அவர் வருகிற சமயத்தில் சகல காரியங்களும் கவனிக்கப்பட்டிருக்கும், அவரும் பிறருடைய தேவைகளைச் சந்திக்க வசதியாக இருக்கும். இன்றும் இது பொருந்தும். நாம் எவ்வளவு கொடுக்க வேண்டுமென கர்த்தர் நியமித்துள்ளாரோ அதை நாம் கொடுத்தால் கர்த்தரின் பணிகளைச் செய்யப் போதுமான பண வரவு நம்மிடம் இருக்கும். இன்று, வெளி மத உலகிலே உள்ள பல சபைகள் இந்த உபதேசத்தைப் பின்பற்றுவதில்லை. எனவே, எப்போதுமே அவர்கள் பணத்திற்காக கையேந்தி வருகின்றனர். சபை உறுப்பினர்கள் தாமே கொடுப்பதை விடுத்து, உலகத்து பிறமக்களிடம் உதவிக்காக பிச்சை எடுக்கின்றனர். இவர்களில் சிலர் புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் விற்றுப் பணமாக்குகின்றனர். இன்னும் சிலரோ நன்கொடை ரசீதுகள் அச்சிட்டு பணவேட்டையில் இறங்குகின்றனர்; அல்லது கட்டணங்கள் வைத்து பொழுது போக்கு நிகழ்ச்சிகளை நடத்தி பணம் சேர்க்கின்றனர். ஆனால், சபைத் தேவைகளைச் சந்திக்கும் பொருட்டு தங்களால் இயன்ற அளவு கொடுக்க வேண்டுமென தமது மக்களுக்குக் கர்த்தர் கட்டளையிட்டுள்ளார். இவ்விதமாக கர்த்தர்

காரியங்களை நடத்துகிறார். அவருடைய திட்டத்தை விட சிறப்பாக நாம் எதையும் செய்து விடமுடியாது.

கொடுத்தல் பற்றிய மற்றொரு வசனப்பகுதியைப் பார்ப்போம். IIகொரிந்தியர் 9 : 6, 7 வசனங்களில் அவை காணப்படுகின்றன : "பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்த படியே கொடுக்கக் கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்." இப்போது கீழ்கண்ட குறிப்புகளைக் கவனியுங்கள் :

1. நாம் விதைத்திருப்பதற்கு ஏற்ப அறுவடை செய்வோம் என அவர் கூறுகிறார். நாம் சிறுக விதைத்தால் சிறுக அறுப்போம். நாம் அதிகமாக விதைத்தால் அதிகமாக அறுவடை செய்வோம். விவசாயத்திலும், தொழிலிலும், இன்னும் வாழ்வின் சகல துறைகளைப் பொருத்த வரையிலும் இது உண்மை. கர்த்தருடைய காரியத்திலும் இது உண்மையாக இருக்கிறது. நாம் அதிகமாகக் கொடுத்தால் அதிகமாகப் பெற்றுக் கொள்ளுவோம். பல மக்கள் ஒரு போதும் ஒன்றையும் பெற்றுக் கொள்ளாமலிருப்பதற்குக் காரணம், அவர்கள் ஒன்றையும் ஒருபோதும் கொடுப்பதில்லை. ஒன்றும் கொடுக்காமல், பெற்றுக் கொண்டிருக்க முடியாது. நம்மில் பலர், கர்த்தருடைய வார்த்தையை முற்றிலுமாக நம்புவதில்லை என நான் அஞ்சுகிறேன். நாம் அவரை சோதித்துப் பார்க்கவேண்டும். அவ்வாறு செய்தால், நாம் அதிகமாகக் கொடுக்கும்போது அவர் இன்னும் மிக அதிகமாகத் தருகிறார் என்பதை நாம் காணமுடியும் என்பதை நான் உறுதியாகச் சொல்லுகிறேன்.

2. தன் தன் வரவுக்குத் தக்கதாக மனதில் நியமித்தபடியே ஒவ்வொருவனும் கொடுக்க வேண்டும் என அவர் சொல்லுகிறார். நாம் எவ்வளவு கொடுக்கப் போகிறோம் என்பதை ஆராதனைக்கு வரும் முன்பே நாம் மனதில் நியமித்துக் கொள்ள வேண்டும். இதைத் தான் அவர் சொல்லுகிறார். காணிக்கை தட்டு உங்கள் முன்பு நீட்டப்படும் வேளை வரை அதைப் பற்றிய சிந்தனையின்றி இருந்துவிட்டு பின்னர் அவசரமாக தட்டுத் தடுமாறி கையில் அகப்பட்ட காசை தட்டில் போடுவது சரியல்ல. ஆனால் நீங்கள் எவ்வளவு கொடுக்க முடியும் என்பதை மனதில் நிச்சயித்துக் கொண்டு அவ்வாறே கொடுங்கள்.

3. விசனமாகவோ கட்டாயமாகவோ ஒருவன் கொடுக்கக் கூடாது என அவர் சொல்லுகிறார். அதாவது, யாருடைய கட்டாயத்திற்காகவோ நீங்கள் கொடுப்பதாக உணர்ந்து கொண்டு கொடுக்கத் தேவையில்லை.

உண்மையிலேயே நீங்கள் கொடுக்க விரும்பாமல் வேறு ஒரு காரியத்திற்காக அந்தப் பணத்தை உங்களிடம் வைத்துக் கொள்ள விரும்பிய நேரத்தில், கொடுக்க வேண்டிய சூழ்நிலை காரணமாக நீங்கள் கொடுக்கும் பட்சத்தில், உங்களைப் பொருத்த வரையிலும் சரி, கர்த்தரைப் பொருத்த வரையிலும் சரி, அவ்வாறு நீங்கள் கொடுத்தது விருதா.

4. கொடுத்தல் அவசியம் என ஒருவன் உணர்வதால் மட்டும் கொடுப்பது ஆகாது என அவர் கூறுகிறார். கொடுக்க வேண்டியதாகி விட்டதே என நீ கவலைப்படும் நிலைக்கு உன்னைக் கர்த்தர் தள்ளிவிட முயற்சிக்கவில்லை. நிச்சயமாக இல்லை.

5. மாறாக, மகிழ்ச்சியுடன் கொடுப்பவனை அவர் நேசிக்கிறார். நீ எவ்வாறு கொடுக்க வேண்டுமென அவர் விரும்புகிறார்? நீ மகிழ்ச்சியாகக் கொடுப்பதையே அவர் விரும்புகிறார். ஏனெனில் நீ கொடுப்பதில் மகிழ்ச்சியடைவதை அவர் பார்க்கிறார். இப்படிக் கொடுப்பவர்களாகவே நாம் எப்போதும் இருக்க வேண்டும்.

இறுதியாக, கர்த்தர் தாமே கூறியதை நாம் நினைவில் வைத்துக் கொள்ளுவோம். " . . . . வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம். " (அப். 20:35). ஆனால் பலர் இந்த வசனத்தை மாற்றி அமைத்து, "கொடுப்பதைப் பார்க்கிலும் வாங்குகிறதே பாக்கியம்" என்பதாக நடந்து கொள்ளுகின்றனரோ என நான் ஐயப்படுகிறேன். ஏன்? ஏனெனில் நம்மில் பலர் பேராசையும், கஞ்சத்தனமும், சுயநலமும் உள்ளவர்களாக இருப்பதால், தேவனுக்கு உரிமையுடன் சேர வேண்டியதை நாம் திருடிக் கொள்ளுகிறோம். நாம் விழித்தெழுந்து, உண்மையில் தேவனுக்குச் சொந்தமானதிலிருந்து நாம் எடுத்து வைத்துள்ள பங்கை அவரிடமே திருப்பி அளித்திட தேவன் தாமே நமக்கு உதவுவாராக! வசனத்தின்படியாக கொடுப்பது எப்படி என்பதை நாம் கற்றுக் கொள்ளாத வரையில், கிறிஸ்தவர்கள் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி ஒரு போதும் நாம் இருக்கமுடியாது.

J.C. Choate — J.C. சோட்.

அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக் கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம்.

1 யோவான் 3 :22

# "சபைக்கு வராதவர்களுக்கு ஒரு திறந்த கடிதம்"

அன்பான சகோதரர்களே! சகோதரிகளே!

நீங்கள் இயேசுவினுடைய சித்தத்தின்படியே அவருக்கு கீழ்படிந்து அவரிடத்தில் வந்தீர்கள். அவரிடத்தில் உங்களை ஒப்புக் கொடுத்தீர்கள். அவருடைய வாக்குத்தத்தத்தின்படி ஞானஸ்நானத்திலே கீழ்படிந்து, பாவத்திலிருந்து மன்னிப்பை பெற்றுக் கொண்டீர்கள். ஆனால் இப்பொழுது ஏதோ சில காரணங்களினால் அந்த நாள் ஞாபகங்கள் மங்கிவருகிறது. நீங்கள் தொடர்ந்து ஆராதனைகளை புறக்கணித்து வருவது, உங்களுடைய உறுதியான நடவடிக்கையாகிவிட்டது. ஏதோ நிகழ்ந்துவிட்டது! காரணம் தெளிவான ஒன்றுதான்! இது முக்கியமல்ல. காரண காரியங்களை ஆராய்வது முக்கியமல்ல. ஆனால் முடிவோ பரிதாபகரமானது. தயவு செய்து ஆண்டவருடைய சபையை புறக்கணிப்பதால் ஏற்படுகிற விளைவை படித்து பாருங்கள்.

## 1. கர்த்தரை வேதனைப் படுத்துகிறீர்கள்

நீங்கள் கர்த்தரை வேதனைப்படுத்துகிறீர்கள். அவர் உங்களை கைவிடுவேன் என்று வாக்குத்தத்தம் பண்ணவில்லை (எபி 13 : 5) ஆனால் நீங்களோ அப்படிப்பட்டவரை புறக்கணிக்கிறீர்கள் நீங்கள் செய்த விசுவாச அறிக்கை மாய்மாலமானது, தேவ பார்வையில், நீங்கள் அவரை மீண்டும் சிலுவையில் அறைகின்றீர்கள் (எபி 6 : 6) உங்களை சுத்தப்படுத்திய மாசற்ற தூய ரத்தத்தை அசுத்தம் என்றெண்ணி, காலின் கீழ் மிதிக்கின்றீர்கள் (எபி 10 : 29) இப்படிப்பட்ட உங்கள் செயல்கள் உங்கள் ஆண்டவரை வேதனைப்படுத்தாதா? நீங்கள் தொடர்ந்து அவரை வேதனைப்படுத்த நினைக்கிறீர்களா?

## 2. சபையை வேதனைப் படுத்துகிறீர்கள்

நீங்கள் சபையை வேதனைப்படுத்துகிறீர்கள் உங்களுடைய வராமை (Absents) எங்களுடைய உள்ளத்தில் அதிக பாரத்தையும் துக்கத்தையும் தருகிறது. நாங்கள் ஆண்டவரிடத்தில் உங்களை மீண்டும் கொண்டு வந்து சேர்க்கக்கூடிய வழிகளையும், வார்த்தைகளையும் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். உங்கள் பேரில் வைத்திருந்த நல்ல மதிப்பு மாறிப்போய் அது தவறானது என்ற எண்ணம் உங்களுடைய வராமையினால் ஏற்பட்டுவிட்டது. நாங்கள் தேவனை புகழ்ந்து பாடி துதிக்

கும்போது உங்களுடைய சத்தம் எங்களோடு சேராமல் இருக்கிறது. பிதாவை நோக்கி ஜெபத்தினால் விண்ணப்பம் செய்யும்போது உங்கள் இருதயம் எங்களோடு ஒருமனப்படாமல் இருக்கிறது. தேவனுடைய பணிக்கென கொடுக்கின்ற தர்மபணத்தில் உங்களுக்கு பங்கில்லாமலிருக் கிறது. உங்களுடைய அறிவும் ஞானமும், தேவனுடைய வார்த் தைகளை சேர்ந்து படிக்க நாங்கள் பகிர்ந்து கொள்ள முடியாமலிருக் கிறது. ஆவிக்குரிய அந்நியோந்நி யத்தில் உங்களது பலம் எங்க ளுக்கு கிடைக்காமலிருக்கிறது. கர்த்தருடைய பந்தியில் நாங்கள் அனைவரும் சேர்ந்து வரும்போது நீங்கள் அங்கு காணாமல் போயிருக்கின்றீர்கள். ஆம்! நீங்கள் சபையை வேதனைப்படுத் துகிறீர்கள்.

### 3. உங்களை வேதனைப் படுத்துகிறீர்கள்

. நீங்கள் உங்களையே வேத னைப்படுத்துகிறீர்கள். நீங்கள் அநேக சாட்சிகளுக்கு முன்பாக பண்ணின நல்ல அறிக்கையை அசட்டை செய்கிறீர்கள். ஆண்ட வரையும் அவருடைய சபை யையும் புறக்கணிப்பதினால், உங் களுக்குள்ள ஒரே நம்பிக்கையை யும், இழந்துவிட்டீர்கள், பிதாவி னிடத்திற்கு நீங்கள் போக, இயேசுவே! ஒரே வழி! அவருக்கு உங்கள் முகத்தை திருப்பிக் கொண்டால், அந்த மெய்யான வழியைவிட்டு நீங்கள் உங்க ளையே திருப்பிக் கொள்கிறீர்கள்.

சகோதரனே! சகோதரியே! உன்னுடைய ஆத்மா ஆபத்தில் சிக்குண்டிருக்கிறது. நீ மனந்தி ரும்பி மீண்டும் ஆண்டவரிடத்தில் சேர வேண்டியது மிகமிக அவசியம். பரலோகம் மிகவும் அற்புதமான ஒன்று. அதை நீ இழந்து போகாதே! நரகம் மிகவும் கொடூரமான ஒன்று. உன்னு டைய சொற்ப கால, இந்த சரீர வாழ்க்கையின் பாவ சந்தோஷத் தினால் அதை ஆதாயப்ப டுத்தாதே. உன்னுடைய மீட்பருக் காக, இழந்துபோனவர்களுக்காக, சபைக்காக, உனக்காக, நீ மீண்டும் சபையாகிய தேவனு டைய வீட்டிற்கு திரும்பி வா. சாத்தானின் பிடிகளை முறித்து போடு! காலம் மிகக் குறுகியதாயி ருக்கிறது.

நாங்கள் உன்னை நேசிக் கிறோம்! உன்னை இழந்து வருந் துகிறோம்! (ஆராதனையில்)

தமிழில்

சகோ. வே. தானியேல் துரைராஜ்
திருச்சி - 1.

## கிறிஸ்துவின் சபை

*சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.*

# வழி, சத்தியம், ஜீவன்

“அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்” என்றார். (யோவான் 14 : 6).

அப்போஸ்தலர்களிடம் இவ்வார்த்தைகளை இயேசு கூறிய போது, ஒரு நிச்சயமான, பூரணமான, பயமற்ற வாழ்வுக்கு அவசியத் தேவையான நான்கு காரியங்களைப் பற்றி நமக்கும் கூறுகிறார்: முதலாவதாக, ஒரு வழி இருக்கிறது என அவர் சொல்லியிருக்கிறார். அடுத்து, சத்தியம் உள்ளது என்றார். மூன்றாவதாக, ஜீவன் உண்டு என அவர் கூறினார். இந்த மூன்று அடிப்படையான காரியங்களும் எங்கு காணப்படுகின்றன என்பதையும் அதே வார்த்தைகள் காட்டுகின்றன. அவை கிறிஸ்துவில் உள்ளன. இருந்த போதிலும், இம்மூன்று காரியங்களையும் இணைக்கும் மற்றொரு அறிவிப்பையும் இயேசு அத்துடன் சேர்த்து, மிகவும் அடிப்படையானதும் முக்கியமானதுமான உறவில் நம் ஒவ்வொருவரையும் வழி நடத்துகிறார். தேவனோடு நமது உறவுக்குள்ள திறவுகோலை அவர் நமக்கு அறிவித்தார். இது நான்காவது முக்கிய காரியம்: கிறிஸ்து வினாலன்றி யாரும் பிதாவினிடத்தில் வர இயலாது. இந்த நான்கு காரியங்களையும் நாம் கவனித்துப் பார்த்தால், இயேசுவையும், அவர் வரவேண்டிய காரணத்தையும், நமக்கு அவரின் அவசியத்தையும் நாம் தெளிவாக புரிந்து கொள்ளலாம்.

இயேசுவே வழி : “. . . வழியை நாங்கள் எப்படி அறிவோம்?” என அப்போஸ்தலர் தோமா, யோவான் 14 : 5ம் வசனத்தில் ஒரு கவலைக்கிடமான கேள்வியைக் கேட்கின்றார். கிறிஸ்துவின் உடனடியான பயணத்தைப் பற்றி அப்போது அப்போஸ்தலர்கள் அறியவில்லை. விரைவிலேயே அது துன்பத்தோடும், சித்திரவதைகளோடும், சிலுவையின் மரணத்தோடும் தொடங்கவிருந்தது. மனுக்குலத்தின் பாவங்களை அவர் சுமக்க வேண்டியவராக இருந்தார். மரித்தோரிலிருந்து எழுந்து, பரலோகத்தின் தமது பிதாவிடம் திரும்பிச் செல்பவராக இருந்தார். ஆனால் அப்போஸ்தலர்கள் இவற்றை முழுவதுமாக புரிந்து கொள்ளவில்லை. அவரைப் பின்பற்றுவது எப்படி என்பதில் திகைத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் நடக்க வேண்டிய பாதை எது? அவர்களுடைய அவசியம் என்ன? அவர்களுக்கு என்ன சம்பவிக்கும்? இவ்வாறு குழம்பிப் போயிருந்தனர்.

இப்படிப்பட்ட எண்ணங்கள் நம் ஒவ்வொருவரையும் தாக்கு கின்றன. இந்த வாழ்க்கையில் நாம் எந்த பாதையில் நடக்க வேண்டும்? இங்கு நாம் இருப்பதின் நோக்கம் என்ன? நமது ஆத்துமாக்கள் பயண மாகும் திசை யாது? நிச்சயமற்ற நிலையில், நாம் குழம்பி, வீழ்ந்து போகிறோம். நாம் பாதுகாப்பற்றவர்களாக உணருகிறோம். சந்தே கத்தில் நாம் நிறைந்திருக்கும் போது, தவறான திசையில் நடக்க ஆரம் பிக்கிறோம். அறியாமையின் விளைவாக, உண்மையான நோக்கம் எதுவுமின்றி அங்குமிங்கும் அலைகிறோம். காலமும் சக்தியும் வீணாக் கப்படுகின்றன.

ஆனால், நமக்கு வழிகாட்டியான இயேசுவை நாம் பின்பற்றினால், நமது வாழ்வு வித்தியாசமாக அமைகிறது. ஏசாயா 42 : 16ல் கர்த்தர் சொன்னார் : "குருடரை அவர்களை அறியாத வழியிலே நடத்தி, அவர் களுக்குத் தெரியாத பாதைகளில் அவர்களை அழைத்துக் கொண்டு வந்து, அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமும், கோணலைச் செவ்வையுமாக்குவேன்; இந்தக் காரியங்களை நான் அவர்களுக்குச் செய்து, அவர்களைக் கைவிடாதிருப்பேன்". கிறிஸ்துவே வழி. இந்த தீர்க்க தரிசனம் இவரில் நிறைவேறியிருக்கிறது. (பார்க்க : யோவான் 8 : 12; 12 : 35; எபே. 5: 8- 16; 1 யோவான் 1 : 5 - 7). கிறிஸ்துவின் வழியாக நமக்கு வெளிச்சத்தின் வழி உண்டு. நமது வாழ்வை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டுமென்று அவருடைய வசனங்களும் முன்னுதாரணங்களும் நமக்குக் காட்டுகின்றன. மேலான குறிக்கோள் கள், எண்ணங்கள், செயல்கள் அனைத்தையும், வழியாகிய கிறிஸ்து நமக்கு அளிக்கிறார். வாழ்விற்குச் சரியான எல்லைகள் நமக்குத் தரப் பட்டுள்ளன. அவருடைய ஒளியில் நிலைத்திருக்கும்படி நமது வாழ்வை திட்டமிட்டுக் கொள்ள முடியும். வழியை அறிந்து கொள்ளும் போது, இழப்பு, குழப்பம், ஆகிய உணர்வுகள் மறைந்து போகும். சகலவற் றிற்கும் மேலாக, இரட்சிப்பின் மகிழ்ச்சியையும், நமது வாழ்வின் உண்மையான காரணத்தை நிறைவேற்றும் மகிழ்ச்சியையும் இயேசு நமக்கு அளிக்கிறார். (பார்க்க : பிரசங்கி 12 : 13; மத்தேயு 5 : 16; யோவான் 15 : 8; 1 யோவான் 5: 3 ; 1 பேதுரு 4 : 11; 1 கொரி. 6 : 20). நமது வழியாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி பிறருக்குச் சொல்ல, இந்த மகிழ்ச்சிகள் அனைத்தும் நம்மை இட்டுச் செல்லுகின்றன.

இயேசுவே சத்தியம் : சத்தியத்தை தாங்கள் அறிவதாகவும், சத்தி யத்தையே பேசுவதாகவும் பல மக்கள் நினைக்கின்றனர். இன்னும் பலரோ, சத்தியம் என ஒன்று இருக்கிறதா என்றே கேட்கின்றனர். மனிதன் சத்தியத்தை அறியக்கூடுமா என சிலர் ஐயுறுகின்றனர். மனிதர்

களுடைய இந்த வாதங்கள் அனைத்தையும் அறிந்து கொண்ட பின்னரும், ''நமது வாழ்வுக்கு ஏதாவது அடிப்படை அல்லது நோக்கம் இருக்கிறதா?'' என்று கேட்கக் கூடியவர்களாகவே இருக்கிறோம். தேவனிடமிருந்து சத்தியத்தை அடையாத பட்சத்தில், மனிதனுடைய மதங்கள், தத்துவங்கள் அடங்கிய தனது சொந்த கற்பனைகளை மட்டுமே மனுக்குலம் சார்ந்திருக்கும். அவை அனைத்தும் பயனற்றவைகளாகத்தான் இருந்திருக்கும். தேவன் வெளிப்படுத்திய சத்தியம் இல்லையென்றால், நமது ஆத்துமாவிற்கு உண்மையான திருப்தி ஒரு போதும் கிடைக்காது.

ஆனால் சத்தியம் இருக்கிறது. கிறிஸ்துவே அந்த சத்தியம். அவருடைய வார்த்தை சத்திய வசனமாக இருக்கிறது. (யோவான் 1 : 17). கிறிஸ்து (சத்தியம்) என்ற பாறையின் மேல் நமது எல்லா நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் நாம் கட்டக் கூடியவர்களாக இருக்கிறோம். இயேசு சொன்னார் : ''என்னிடத்தில் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் யாருக்கு ஒப்பாயிருக்கிறான் என்று உங்களுக்குக் காண்பிப்பேன். ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின் மேல் அஸ்திபாரம் போட்டு, வீடு கட்டுகிற மனிதனுக்கு ஒப்பாயிருக்கிறான்; பெரு வெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின்மேல் மோதியும், அதை அசைக்கக் கூடாமற் போயிற்று; ஏனென்றால் அது கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது.'' (லூக்கா 6 : 47 - 48). சத்தியமாகிய இயேசு ஒரு உறுதியான அஸ்திபாரம். அந்த பாறை மீது கட்டப்படும் நம்பிக்கையும் மகிழ்ச்சியும், அவசியமானதாகவும் அபிரிமிதமானதாகவும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. சகல நற்கிரியைகளுக்கும் காரணமாக நமக்கு இருப்பது சத்தியமே. இவற்றையும் சகிப்புத்தன்மையையும் சத்தியமாகிய கிறிஸ்து நமக்கு அளிக்கிறார்.

இயேசு ஜீவனாக இருக்கிறார் : சகல மனிதர்களும், வாழ விரும்பும் உணர்வைக் கொண்டுள்ளனர். நமது கவலை அடிப்படையானதே. நமது வாழ்வின் பல ஆண்டுகளை, வாழ்வதற்கான திட்டங்களை தீட்டுவதிலும் வேலை செய்வதிலும் செலவழிக்கிறோம். ஒவ்வொரு மனிதனின் அக்கறையும் தனது சொந்த வாழ்வுக்காகவும், அவனது குடும்பத்தினரின் வாழ்வுக்காகவும், அது மட்டுமல்லாமல் மனுக்குலத்திற்காகவும், ஒவ்வொரு ஜீவராசிக்காகவும் அமைய வேண்டும். என்ற போதிலும், வெறும் மாம்ச வாழ்க்கையை விட மேலானதிலும் சம்பந்தப்பட்டுள்ளோம். நாம் ஆவிக்குரியவர்களாகவும் இருக்கிறோம். அப்படியிருப்பதால், ஒருவனுடைய ஆத்துமாவும் ஜீவனை விரும்புகிறது. ஆனால் ஒரு மனிதனுடைய மாம்ச குணங்கள், அவனுடைய ஆத்து

மாவின் ஜீவனையும் பாதிக்கக் கூடியதாக இருக்கிறது. (ரோமர் 7 : 24 ; 3 : 20 - 23). ஒரு நாள் நம் ஒவ்வொருவருடைய மாம்ச வாழ்வும் முடிவுக்கு வருகிறது. ஆனால் ஒவ்வொருவனுடைய ஆவியும் (ஆவிக்குரிய மரணத்தின் விளைவாக) நித்திய ஆக்கினையிலோ அல்லது தேவனோடு நித்திய மகிழ்ச்சியிலோ தொடர்ந்து வாழும். மாம்ச வாழ்வின் பாவம் (தேவனிடமிருந்து பிரிக்கக் கூடிய) ஆவிக்குரிய மரணத்தை உண்டாக்குகிறது. மனுக்குலம் முழுவதும் பாவம் செய்துள்ளது. (ரோமர் 3 : 23). எனவே, எல்லாரும் ஆவிக்குரிய மரணத்தை அடைந்துள்ளனர். ஆவிக்குரிய ஜீவனை பெற்றுக் கொள்ள, தேவனால் நமது பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும். கிறிஸ்துவில் மட்டுமே இது நடைபெறக் கூடியதாக இருக்கிறது. (யோவான் 1 : 29). கிறிஸ்துவின் நற்செய்திக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். (ரோமர் 6 : 17 - 18; 3-6; மாற்கு 16 : 16; அப். 2 : 38; 8 : 35 - 3a). நற்செய்திக்குக் கீழ்ப்படிந்து, தனது பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, கிறிஸ்துவில் தனது விசுவாசத்தை அறிக்கையிட்டு, தண்ணீரில் முழுகி திருமுழுக்குப் பெறும்போது ஒரு பாவி கீழ்ப்படிகிறான். இவ்விதமாக நாம் மீண்டும் பிறக்கிறோம். (யோவான் : 1 : 12 - 13, 3 : 3 - 5; 1 பேதுரு 1 : 23). நாம் புதிய சிருஷ்டிகளாக ஆகிறோம். (2 கொரி. 5 : 17), நமது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. (ரோமர் 3 : 24 : எபே. 1 : 7). இயேசு கிறிஸ்துவுடன் உண்டான ஒருவனுடைய உறவைப் பொறுத்தே ஒருவனுடைய ஆத்துமாவின் மகிழ்ச்சி தொடர்ந்து நிலவுகிறது. (யோவான் 11 : 25; 2 தீமோ. 1 : 10, 4 : 8)

ஆனால் நித்திய. ஆவிக்குரிய மகிழ்ச்சியை விட இயேசுவில் வாழ்வது அதிக பலனை அளிக்கிறது. நமது சகல திட்டங்களும், பணிகளும் கிறிஸ்துவுக்குள் அதி தீவிரமாகவும் நிறைவாகவும் நிறைவேறுகின்றன. கிறிஸ்தவ வாழ்க்கையைக் கடைபிடிக்கும்போது நாம் மகிழ்ச்சியாக இருக்கிறோம். நமது வாழ்வு கிறிஸ்துவில் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் அளிக்கிறது. (1 பேதுரு 1:8; ரோமர் 15 : 4). ஒரு சகோதர அன்பையும், தெளிந்த மனதையும், தேவனிடமிருந்து வரும் விசேட சமாதானத்தையும் நம்மில் நிலை நிறுத்துகிறது. (2 தீமோ. 1 : 7 : பிலிப். 4 : 7). நற்கிரியைகளிலும், தேவனைப் பற்றிய அறிவிலும், இயேசுவோடு நாம் வாழும்போது வளருகிறோம். (கொலோ 1 : 10). பிற கிறிஸ்தவர்களிடமிருந்து உதவி, ஆறுதல், உற்சாகம் அனைத்தையும் நாம் பெற்றுக் கொள்ளுகிறோம். கலா. 6: 1-2. கிறிஸ்துவில் வாழ்வது தேவ ஆசீர்வாதங்களை நமக்குக் கொண்டு வருகிறது. (நீதி. 28 : 20; 1 கொரி. 2 : 9).

ஆகவே, ஒரு மனிதனுடைய ஆத்துமாவின் நித்திய மகிழ்ச்சியும் பூமியில் அவனுடைய வாழ்வில் உண்மையான மகிழ்ச்சியும் கூட கிறிஸ்துவை சார்ந்திருப்பதை நாம் காண்கிறோம். "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லா தவன் ஜீவன் இல்லாதவன்". (1 யோவான் 5 : 12).

ஆகவே, இயேசு நமக்கு மூன்று விதமாகக் காட்சி தருகிறார். அவரே வழி, அவரே சத்தியம், அவரே ஜீவன். கிறிஸ்து வழியாக அன்றி பிதாவினிடத்திலல் ஒருவன் வர இயலாது என அவர் சொல்லும் போது, இம் மூன்றையும் இணைத்தே கூறுகிறார். பரலோக பிதாவிற்கு அவரே வாசலாக இருக்கிறார். பரலோக பிதாவானவர் தேவனாக இருக்கிறார் எனக் கூறும் இரண்டு வசனங்கள் எபேசியர் 4 : 6ம் 1 யோவான் 3 : 1ம் ஆகும். எனவே, இயேசு கிறிஸ்து மூலமாக மட்டுமே தேவனை அடையும் ஒரே வழி உள்ளது. இடுக்கண் நிறைந்த வாசல் மூலமாக ஒரே சத்திய வழிக்குள் நாம் பிரவேசிக்க தேவன் விரும்பு கிறார். (மத். 7 : 13 - 14). இயேசு வழியாக மட்டுமே இதை நாம் செய்ய முடியும். சத்தியத்தை புரிந்து அதை நாம் பின்பற்ற வேண்டுமென தேவன் விரும்புகிறார். (ரோமர் 1 : 18, 25). இயேசு வழியாக மட்டுமே இதை நாம் செய்ய இயலும். நித்திய ஜீவனாகிய தமது கொடையை நாம் ஏற்றுக் கொள்ள தேவன் விரும்புகிறார். இயேசு வழியாக மட்டுமே நாம் இதைச் செய்ய முடியும். (கொலோ. 2 : 12 - 13).

உண்மையான ஆவிக்குரிய மகிழ்ச்சி, அதன் அவசியம், ஆறுதல், பாதுகாப்பு, ஸ்திரத் தன்மை, அதிகாரம், சக்தி, வாக்குறுதி, மன்னிப்பு இவை அனைத்தும் கிறிஸ்துவாகிய இயேசுவில் காணப்படுகின்றன. அவரே வழி, சத்தியம், ஜீவன் அவர் மூலமாக அன்றி, ஒருவரும் பிதாவினிடத்தில் வர இயலாது.

லீசெஸ்ட் — எஸ்.எஸ். ராஜன்.

## மனதுருகிற தேவன்

*துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன் அவர் அவன்மேல் மனதுருகுவார் நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன் அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்.*

# மாணவர் விளக்க உரை-பாடம் - 2

**உ) அழிக்க முடியாமை :**

1. மத்தேயு 24:35
2. வேதாகமத்தை அழிக்க முயற்சிகள் :

அ) ஏரேமியா 36 - யோயாக்கீம் ராஜா வேதத்தைக் கிழித்து தியிட்டான். ஆனால் தேவன் ஏரோமியாவைக் கொண்டு. - பழைய சுருள்களை மறுபடியும் எழுதினார்.

ஆ) கத்தோலிக்க சபை தொடர்ந்து, வேதத்தின் செல்வாக்கை அழிக்க முயற்சித்தது. உதாரணமாக அதன் கார்டினல்கள் 1550-ல் போப்புக்கு எழுதிய வாசகத்தைப் பாருங்கள். ஆயினும் இன்னும் வேதாகமம் நிலைத்திருக்கிறது.

இ) வால்ட்டோர் (1694-1778) இந்த பிரெஞ்சு தத்துவமேதை இன்னும் 100 வருடங்களில் ஒரு பைபுள் கூட இருக்காது என்றார். ஆனால் அவருடைய மரணத்துக்குப் பின் அவருடைய அச்சகங்கள் வேதத்தை அச்சிடவும் அவருடைய வீடு அவைகளை சேமித்து வைக்கவும் பயன்படுகிறது. நிச்சயமாகவே வேதாகமம் தேவனிடமிருந்து வந்தது. அது இன்றும் நிலைத்திருக்கிறது.

**ஏ) மேலான ஒழுக்க நெறிகள் :**

| | | |
|---|---|---|
| 1. இயேசு சொன்னார் | மத்தேயு | 5:44 |
| 2. இயேசு சொன்னார் | மத்தேயு | 16:24 |
| 3. பவுல் சொன்னது | கொலோ | 3:1 |
| 4. யாக்கோபு சொன்னது | யாக்கோபு | 1:2 |

5. இவைகள் மனிதர்களுடைய புத்திமதிகள் போலவா இருக்கிறது. ஆவிக்குரிய காரியங்களில் தேவ வார்த்தையாகிய வேதத்தைத் தவிர ஒரு நிலையாக அதிகாரமாக ஏற்றுக் கொள்ள வேறு ஏதாவது இருக்கிறதா!

## மனிதனுடைய பாரம்பரியங்களுக்கும் பழக்க வழக்கங்களும் :

1. இன்றைக்கு இருக்கிற பிரிவினைக் கூட்டத்தில் குழந்தைகள் ஞானஸ்நானம், மாதத்தில் ஒருநாள் கர்த்தருடைய பந்தி. ஆராதனையில் இசைக் கருவிகள் பயன்படுத்துவது, இவைகள் எல்லாமே மனிதர்களுடைய பாரம் பரியங்களே.
2. அதை முதல் நூற்றாண்டு சபையோடு ஒப்பிட்டுப் பாருங்கள். அப் 17:11
3. மனிதர்களுடைய பாரம்பரியங்களைப் பற்றி இயேசுவின் எண்ணம் என்ன? மாற்கு 7:7-9.

4. மனிதர்களுடைய பாரம்பரியங்களையும், பழக்கவழக்கங்களையும் குறித்து அப்போஸ்தலனாகிய பவுலின் எண்ணம் என்ன?

கொலோ 2:8

இந்தத் தகவல் ஹிஸ்டரி அண்டு மிஸ்டரீ ஆப் ரிலிஜன் துருதி என்ற புத்தகத்திலிருந்தது. ஏஜஸ் - ஆசிரியர்.

ஜே. போர்ட்டர் வில்ஹைட் - ஸ்டார் பப்ளிகேஷன்ஸ் ஃபோர்ட்ஒர்த்.

மகா பரிசுத்தமுள்ள உமக்கு எங்களால் கொடுக்க முடிந்த எல்லா ஆலோசனைகளிலும் மிக முக்கியமானதை கடைசிவரை இரகசியமாகவே வைத்திருக்கிறோம். நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியதில் நாம் நமது கண்களை நன்றாகத் திறந்தும் நாம் சிந்திக்கப் போகிற வேலையில் எல்லா வல்லமையோடும் தலையிட வேண்டும். சுவிசேஷம் வாசிக்கப்படுவது எவ்வளவு குறைவாக அனுமதிக்கப்பட முடியுமோ அவ்வளவு குறைவாகவ அனுமதிக்கப்பட வேண்டும். (விசேஷமாக நவீனமான பாஷைகளிலும் உம்முடைய அதிகாரத்திலும் கீழுள்ள நாடுகளிலும்) பொதுவாக ஆராதனையில் வாசிக்கப்படுகிற மிகக் குறைந்ததே போதுமானது. வேறு எங்கும் சுவிசேஷம் எவரும் வாசிக்க தடைவிதிக்க வேண்டும் (மக்கள் எதுவரை அந்த குறைந்த அளவோடு திருப்தி அடைகிறார்களோ அதுவரை நம்முடைய நலன் பெருகும். ஆனால் மக்கள் எந்த சமயத்திலிருந்து, அதிகம் வாசிக்க ஆசைப்படுகிறார்களோ அது முதல் நம்முடைய நலன் பாதிக்கப் படும்).

இந்தப் புத்தகம் புயலென நமக்கெதிராக எழும்புகிற எந்த முரட்டாட்டமுள்ள மனிதனைவிடவும் நமக்கு நஷ்டத்தைக் கொண்டு வருவதில் ஆபத்தானது. உண்மையாகவே யாராவது பைபிளை மிகவும் சரியாகப் படித்து நமது சபைகளில் நடக்கிறவைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அவன் விரைவில் நம்முடைய போதனைகளிலுள்ள முரண்பாடுகளையும், மிக அதிகமாக அவைகள் வேதத்துக்கு எதிராகவும் இருப்பதைக் கண்டுகொள்வார்கள்.

ஜனங்கள் இதைக் கண்டுணர்ந்தால் சகலமும் அவர்களுக்கு வெளிப்படுத்தப்படும் வரை நம்மைத் தொல்லை செய்வதில் ஓய மாட்டார்கள். பிறகு அவர்கள் முன் நாம் கேலிப் பொருளாகவும், உலகம் முழுதும் வெறுக்கப்படுவர்களாகவுமாவோம். மிகவும் ஞானமாக தொல்லைகளைத் துண்டி விட்டு விடாதபடி அவர்களுடைய கரங்களிலிருந்து பைபிளைப் பிடுங்க வேண்டியது அவசியம்.

(இவ்வாலோசனை 1550-ம் ஆண்டில் போப் ஜீல்ஸீக்கு அவருடைய கார்டினல்களால் சொல்லப்பட்டது. அது பிரான்சின் பாரிசில் உள்ள பிப்ளியோதெக்கில் காணப்படுகிறது. அந்தப்புத்தகம் ரிசர்வ் 22719 பக்கம் 101-102.

6. முடிவுரை :

தேவன் மனிதனுடைய பழக்க வழக்கங்களும் பாரம்பரியங்களும் அவருடைய வார்த்தையை மீறும் போது அவைகளை ஒரு நிலையானதாக ஏற்றுக் கொள்வதில்லை.

*1) மனிதனுடைய பொதுவான அறிவு அல்லது காரண காரியங்களை கேட்டறியும் சக்தி.*

1. ஏரேமியா 10:23
2. நீதிமொழிகள் 3:5, 6
3. ஏசாயா 55:8,9
4. முடிவு :மனிதன் முற்றிலுமாக தன்னுடைய பொது அறிவையோ, காரண காரியத்தை கேட்டறியும் சக்தியை யோ மட்டும் சார்ந்திருக்க முடியாது.

2) 1. மனித உணர்வுகள் :

2. நீதிமொழிகள் 14 : 12
3. மத்தேயு 7:21
4. முடிவு : மனித உணர்வுகளும் உணர்ச்சி வசப்படுதலும் தேவன் மார்க்கத்தில் நம்பத்தகுந்த வழிகாட்டியல்ல.

3) முடிவு : பிரசங்கி 12:13

ஆவிக்குரிய விஷயங்களில் தேவனால் ஏவப்பட்ட வார்த்தையாகிய வேதாகமமே இறுதியான ஒரே நிலையாகும்.

4) வேதாகமத்தின் அமைப்பு :

66. புத்தகங்கள்

1. பழைய ஏற்பாடு (39 புத்தகங்கள்)
2. புதிய ஏற்பாடு (27 புத்தகங்கள்)

5) பழைய ஏற்பாட்டில் உள்ள பிரிவுகள் :

1. 5 சட்டப்புத்தகங்கள் (ஆதியாகம் - உபாகமம்)
2. 12 சரித்திர புத்தகங்கள் (யோசுவா - எஸ்தர்)
3. 5 கவிதைப் புத்தகங்கள் (யோபு - உன்னதப்பாட்டு)
4. 17 தீர்க்கதரிசன புத்தகங்கள் - ஏசாயா - தானியேல்)

   12 சிறிய தீர்க்கதரிசன புத்தகங்கள் (ஓசியா - மல்கியா)

6) புதிய ஏற்பாட்டிலுள்ள பிரிவுகள்:

1. 4 சுவிசேஷங்கள் (மத்தேய - யோவான்)
   கிறிஸ்துவின் வாழ்க்கை
2. 1 சரித்திரப் புத்தகம் (அப்போஸ்தலருடைய நடப்புகள்)
   எப்படி கிறிஸ்தவனாவது.
3. 21 நிருபங்கள் (ரோமர் - யூதா)
   எப்படி கிறிஸ்துவனாக வாழ்வது.

4. 1 தீர்க்கதரிசன புஸ்த்தகம் (வெளிப்படுத்தின விசேஷம்) கிறிஸ்துவனுடைய நம்பிக்கை

7. நாம் இப்பொழுது எந்த ஏற்பாட்டின் கீழ் வாழ்கிறோம்? நாம் எதற்கு கீழ்படிய கடமைப்பட்டுள்ளோம் ?

1. இன்று நாமகரண உலகில் : சிலர் ஓய்வு நாளையும் பத்து கற்பனைகளையும் கைக்கொள்ள வேண்டுமென்று போதிக்கிறார்கள்.

2. முதலாவது பழைய ஏற்பாட்டைக் குறித்து சில முக்கியமான குறிப்புகளைப் பார்பபோம்.

அ) இது பிரமாணம் என்றும் (யோவான் 1:17உபாகமம் 4:44) ஏற்பாடு (யாத்திரகமம் 34:27) என்றும்கூட அழைக்கப் பட்டுள்ளது

ஆ) இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து சீனாய் மலலைக்கு கொண்டு வரப்பட்ட போது இது தேவனுக்கும், இஸ்ரவேலுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டது. (யாத்திராகமம் 19 : 1-5)

இ) இஸ்ரவேல் மக்களுக்காகவே கொடுத்தப்பட்ட ஒரு தேசிய சட்டம் இது வேறு யாருக்கும் அல்ல.

| | | |
|---|---|---|
| 1 | யாத்திராகமம் | 19: 3, 6 |
| 2 | " | 34: 27 |
| 3 | உபாகமம் | 5: 1 |

ஈ) இதில் 10 கட்டளைகளும் அடங்கும் ( யாத்திராகமம் 20 : 3-17: 34:28)

உ) இது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே" ..... அந்த சந்ததி வருமளவும் கலாத்தியர் 3:19. அந்த சம்ததி கிறிஸ்து கலாந்தியர் 3:16.

ஊ) புதிய பிரமாணம் மாற்றப்படும்படிக்கு நீண்ட காலத்துக்கு முன்பே முன்னுரைக்கப்பட்டது. எரேமியா 31:31

எ) இயேசு அதை நிறைவேற்றும்படி வந்தார்.

| | | |
|---|---|---|
| 1. | மத்தேய | 5:17 |
| 2. | லூாக்கா | 24 :25-27: 44-48 |

ஏ) இயேசு அதை எடுத்து அவருடைய சிலுவையின்மேல் ஆனியடித்தார்

(கொலோசேயர் 2:14-16)

ஐ) இயேசு கிறிஸ்துவினுடைய புதிய ஏற்பாடு அவருடைய மரணத்திற்குப்பின் அமலுக்கு வந்தது என்ற உண்மை யோடு இது ஒத்திருக்கிறது. அந்தப்படி பழைய பிரமாணம் மாறிற்று (எபிரெயர் 9:15 -17)

ஒ) அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 6:15- ல் கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டின் கீழ் இல்லை. 7-4 கிறிஸ்தவர்கள் பழைய பிரமானத்துக்கு மரித்திருக்கிறார்கள். 7:6 பழைய சட்டத் தினின்று கிறிஸ்தவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

| | | |
|---|---|---|
| **HINDI** | : | Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049. |
| **ENGLISH** | : | Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049. |
| **TELUGU** | : | Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001. |
| **TAMIL** | : | Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084. |
| **MALAYALAM** | : | Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034. |
| **KANNADA** | : | Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004. |

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted ar Erode HPO on 20, ஜூன் - 1996
ஜூன் THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## -:அஞ்சல் வழி வேதாகமக் கல்வி :-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை" ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

Published by Church of Christ, Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

If undelivored Please return to
The Editor phone : (04257) 20030
THIRUMARAI AASAAN
POST BOX No. 27, KANGAYAM - 638 701

PRINTED MATTER BOOK - POST